1st November 1962]

விவசாயிகளைக் குடியேற்றுதல்

*** 1049 கேள்வி.—திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பாசன வசதி செய்து கொடுக்க முடியாத வறண்ட பகுதிகளில் வாழும் விவசாயிகளைத் தண்ணீர் வசதியாயிருந்தும் விவசாயம் செய்ய ஆள் இல்லாமல் இருக்கும் பகுதிகளுக்குக் குடியேற்ற திட்டம் ஏதேனும் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை, ஐயா.

ரசாயன உரங்கள்

*** 1050 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சோடியம் சல்பேட்டை சல்பேட் உரம் என்று சொல்லி விற்கப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ?

(இ) அதைத் தடுக்க சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இதுவரை ஒரு புகாரும் வரவில்லை.

(இ) எழாது.

போலீசார் (சம்பள விகிதம்)

*** 1051 கேள்வி.—திரு. அ. சாமிதாஸ் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருவிதாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலிருந்து சென்னை ராஜ்யத்திற்கு மாற்றப்பட்ட போலீசார் அனைவருக்கும் சென்னை ராஜ்ய போலீசாருக்குக் கொடுக்கப்படும் சம்பளமும் அலவன்சும் உத்தியோக உயர்வும் கொடுக்கப்பட்டுவிட்டதா ?

(இ) அப்படிக்கொடுக்கப்படவில்லை என்றால் அதற்குரிய காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Fixation of pay in the Madras scales has not yet been done. However, promotions are being ordered.

(*b*) The services of the Police personnel transferred from the former Travancore-Cochin State had to be first integrated with the services of this State before the question of fixation of their pay in Madras scales could be taken up. Orders for integration ofs. services have been issued already. Action is being taken to fixv. the pay of the transferred personnel in Madras scales of pay. As regards promotion to higher categories, promotion is ordered in Kanyakumari district as is being done in all other districts.

[1st November 1962

திரு. அ. சாமிதாஸ்: சார் 150 ரூபாய்க்குக் குறைவாகச் சம்பளம் வாங்கக்கூடியவர்களுக்கு வழங்கப்படுகிற அலவன்சுகூட இன்னும் தங்களுக்குக் கொடுக்கப்படவில்லை யென்ற புகார் போலீஸ் ஊழியர்களிடமிருந்து வந்திருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு என்னிடம் தகவல் ஒன்றும் இல்லை.

Police outposts.

* 1052 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to open a police out-post in Thoppur village in Dharmapuri taluk?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

* 1053 Q.—SRI R. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal to convert the Police Out-Post at Perambalai in Dharmapuri taluk into a regular police station; and

(b) if so, when?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The proposal is under the consideration of the Inspector-General of Police.

(b) The proposal will be duly considered by Government after its receipt.

* 1054 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal to open a police out-post in Indur in Dharmapuri taluk; and

(b) if so, when?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No, Sir.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: இந்தூரில் ஒரு போலீஸ் அவுட்-போஸ்ட் இருக்க வேண்டியது அவசியமா என்பதை அரசாங்கம் பரிசிலனை செய்ததா? அப்படியில்லை யென்றால், பரிசிலனை செய்து ஆவன செய்ய முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இம்மாதிரி கோரிக்கை வரும் போது யோசனை கூறப்படும்போது, இதைப் பரிசிலனை செய்து, அவசியமா என்று பார்த்துத்தான் முடிவு செய்யப்படுகிறது. சில இடங்களில் அவுட்-போஸ்ட் வைக்கப்படுகிறது; சில இடங்களில் புதிய போலீஸ் ஸ்டேஷன் வைக்கப்படுகிறது. சில இடங்களில் இது அவசியம் இல்லை என்றும் முடிவு செய்யப்படுகிறது.